தினகனி

செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253


நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 53 | 4 Pages | 22.9.2024 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 53 | 4 பக்கங்கள் | 22.9.2024 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**தவமறைந் தல்லவை செய்தல் புதல்மறைந்து**
**வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று**

**விளக்கம்:**
தவக்கோலத்தில் மறைந்து கொண்டு தவம் அல்லாத தீயச்செயல்களைச் செய்தல், புதரில் மறைந்து கொண்டு வேடன் பறவைகளை வலைவீசிப் பிடித்தலைப் போன்றது.

# இலங்கை அதிபர் தேர்தல் வாக்குப்பதிவு தொடங்கியது

இலங்கை, செப். 22

இலங்கையில் கடந்த 2022ம் ஆண்டு கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதால் பொதுமக்கள் அரசுக்கு எதிராக போராட்டத்தில் குதித்தனர். இதையடுத்து அப்போது அதிபராக இருந்த கோத்தபய ராஜபக்சே பதவியை விட்டு விலகி நாட்டை விட்டே ஓடினார்.

அதன் பிறகு இலங்கை அதிபராக ரணில் விக்ரமசிங்கே பொறுப்பேற்றுக்கொண்டார். இந்தியா உள்ளிட்ட நாடுகள் உதவிக்கரம் நீட்டியதால் இலங்கை மெல்ல மெல்ல பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வருகிறது.

அதிபர் ரணில் விக்ரமசிங்கேவின் பதவி காலம் வருகிற நவம்பர் மாதம் 17ந்தேதி முடிவடைகிறது. இதையடுத்து புதிய அதிபரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் இன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இன்று காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது. மாலை 58 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும். அதனைத் தொடர்ந்து உடனடியாக வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.


தேர்தலுக்காக மொத்தம் 13,400 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த தேர்தலில் தற்போதைய அதிபர் ரணில் விக்ரமசிங்கே சுயேட்சையாக போட்டியிடுகிறார். 1 கோடியே 70 லட்சம் பேர் வாக்களிக்க உள்ளனர்.

தேர்தலையொட்டி அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நிகழாமல் இருப்பதற்காகவும், அமைதியான முறையில் வாக்குப்பதிவு நடத்தும் வகையிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த தேர்தலில் தற்போதைய அதிபர் ரணில் விக்ரமசிங்கே சுயேட்சையாக போட்டியிடுகிறார்.

இவரை எதிர்த்து எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசா களம் இறங்கி உள்ளார். இலங்கை முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்சேவின் மகன் நாமல் ராஜபக்சே உள்பட 38 பேர் களத்தில் உள்ளனர்.

இருந்த போதிலும் ரணில் விக்ரமசிங்கே, அனுர குமார திசநாயகே, சஜித் பிரேமதாசா ஆகிய 3 பேர் இடையேதான் மும்முனை போட்டி ஏற்பட்டுள்ளது.

# நாயை கரடியாக்கி காட்சிக்கு விட்ட சீன பூங்கா



சீனா, செப். 22

பாண்டாக்களின் பூமியாக கருதப்படுகிறது சீனா. ஆனால் அங்கு நிஜ பாண்டாக்களுக்குப் பதிலாக நாய்களுக்கு வர்ணம் பூசி கரடியாக்கி காட்சிக்கு வைத்த வினோதம் நிகழ்ந்துள்ளது.

ஷான்வேய் நகரில் உள்ள உயிரியல் பூங்காவில் இந்த சம்பவம் நடந்துள்ளது. பார்வைக்கு விடப்பட்டிருந்த பாண்டாக்களில் ஒன்று நாக்கை தொங்கவிட்டுக்கொண்டு மூச்சிரைக்கும் காட்சியும், திடீரெனநாய்போல குரைக்கத் தொடங்கியதும் பார்வையாளர்களை அதிர்ச்சியடைய வைத்தது.

அப்போதுதான் அது வர்ணம் பூசப்பட்ட நாய் என்று தெரியவந்தது. இதையடுத்து அந்த கூண்டில் இருந்த நாய்க் கரடிகளை வீடியோவாக எடுத்து பகிர்ந்து வைரலாக்கினார்கள். அது உள்ளூர் ஊடகங்களிலும் வெளியானது. அதன்பிறகு பூங்கா நிர்வாகம் நாய்களுக்கு பெயிண்ட் பூசிய உண்மையை ஒப்புக்கொண்டது. சில பார்வையாளர்கள் தங்களுக்கான கட்டணத்தை திருப்பித் தர வேண்டும் என்று முறையிட்டு பரபரப்பை ஏற்படுத்தினார்கள்.

# ஏவுகணை தாக்குதலுக்கு பதிலடி: ஹிஸ்புல்லா அமைப்பின் கமாண்டரை கொன்றது இஸ்ரேல்



ஜெருசலேம், செப். 22

லெபனானில் பேஜர் கருவிகள் மற்றும் வாக்கி டாக்கி கருவிகள் வெடித்துச் சிதறிய சம்பவங்களில் ஹிஸ்புல்லா அமைப்பைச் சேர்ந்தவர்கள் உள்பட 37 பேர் உயிரிழந்தனர். 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

இந்த தாக்குதல்களுக்கு இஸ்ரேல் தான் காரணம் என்றும் இது முழுமையான போர் பிரகடனம் என்றும் ஹிஸ்புல்லா தலைவர் தெரிவித்திருந்தார்.

இதற்கிடையே, வடக்கு இஸ்ரேலிய பகுதிகள்மீது ஹிஸ்புல்லா அமைப்பினர் 140 ராக்கெட்டுகளை சரமாரியாக ஏவி பதில் தாக்குதல் நடத்தினர். இதில் இஸ்ரேலின் விமான படைத்தளங்கள் குறிவைக்கப்பட்டதாக ஹிஸ்புல்லா தெரிவித்தது.

இந்நிலையில், லெபனான் தலைநகர் பெய்ரூட் மீது இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் மூத்த படைத்தளபதி இப்ராகிம் அகில் கொல்லப்பட்டதாக தகவல் வெளியானது.

1983ம் ஆண்டு பெய்ரூட்டின் அமெரிக்க தூதரகம் மீது தாக்குதல் நடத்தி 63 பேர் கொல்லப்பட்டதற்கு காரணமான இப்ராகிம் அகில் குறித்த தகவலுக்கு 7 மில்லியன் டாலர் தொகையை அமெரிக்கா பரிசாக அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை இருமடங்காக உயர்வு: முதலமைச்சர் உத்தரவு

சென்னை, செப். 22

தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டவர்கள். நசுக்கப்பட்டவர்கள் முதலானவர்களை ஆதிக்கவாதிகளிடமிருந்து காக்கும் நோக்கில் பல்வேறு சலுகைகளை வழங்கி, அவர்களெல்லாம் முன்னேறுவதற்கு வித்திட்ட சமூக நீதிக் காவலர் என்பது உலகறிந்த உண்மையாகும். அப்பெருமகனார் உடல் உறுப்புகளும் மனவளர்ச்சியும் குன்றிய நிலையில் வாழ்ந்தவர்களுக்குப் புத்துணர்வும் புது வாழ்வும் அளிப்பதற்காக ஊனமுற்றவர் என்ற சொல்லை நீக்கி மாற்றுத்திறனாளிகள் என அவர்களுக்குப் பெயர் தந்து அவர்கள் நலன்களை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசின் கீழ் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை என 27.3.2010 அன்று தனியே ஒரு துறையை புதிதாக ஏற்படுத்தி, அதன் மூலம் பல்வேறு சிறப்புத் திட்டங்களை உருவாக்கி எண்ணற்ற சலுகைகளை வழங்கி அவர்கள் வாழ்விலும் வளம் சேர்த்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தறிஞர் கலைஞர் காட்டிய வழியில் மாற்றுத் திறனாளிகளுக்கு அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணச் சலுகை, மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை ரூ.1,000 என்பதை ரூ.1,500ஆகவும் உயர்த்தி வழங்கினார்கள். அத்துடன், தற்போது, பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிலும் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்க்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகையையும் உயர்த்தி அவர்கள் ஊக்கமுடன் கல்வி கற்க உதவி செய்துள்ளார்கள்.



அதாவது, பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்களில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்க்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை ஆண்டுக்கு 1,000 ரூபாய் என்பதை இரு மடங்காக உயர்த்தி 2,000 ரூபாய் என்றும்;

6ஆம்வகுப்புமுதல்8ஆம்வகுப்பு வரை படிக்கும் மாற்றுத்திறனாளி மாணவமாணவியர்க்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை ஆண்டுக்கு 3,000 ரூபாய் என்பதை இரு மடங்காக உயர்த்தி 6,000 ரூபாய் என்றும்;

9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படிக்கும் மாற்றுத்திறனாளி மாணவமாணவியர்க்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை ஆண்டுக்கு 4,000 ரூபாய் என்பதை இரு மடங்காக உயர்த்தி 8,000 ரூபாய் என்றும் உயர்த்தி வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள்.

அதேபோல, கல்லூரிகளில் பட்டப்படிப்பு படிக்கும் மாற்றுத் திறனாளி மாணவமாணவியர்க்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் கல்வி உதவித் தொகை 6 ஆயிரம் ரூபாய் என்பதை 12 ஆயிரம் ரூபாய் என இருமடங்காக உயர்த்தி வழங்கிடவும் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும், தொழிற்கல்லூரிகளிலும், பட்ட மேல்படிப்புகளிலும் படிக்கின்ற மாற்றுத் திறனாளி மாணவமாணவியர்க்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் கல்வி உதவித் தொகை 7 ஆயிரம் ரூபாய் என்பதை 14 ஆயிரம் ரூபாயாக இரண்டு மடங்கு உயர்த்தி வழங்கிடவும் ஆணையிட்டுள்ளார்கள்.

இப்படி, மாற்றுத் திறனாளிகள் உள்ளங்களில் தேங்கிக் கிடக்கும் ஏக்க உணர்வுகளைத் தீர்க்கும் வகையில் அவர்களுக்கு அனைத்து வகையிலும் உதவிவரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாற்றுத் திறனாளி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவிடும் வகையிலும் அவர்கள் அனைவரும் பயன்பெறும் வகையிலும் அவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவி ஊக்கத் தொகையை இரண்டு மடங்காக உயர்த்தி அதற்காக 14 கோடியே 90 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாயை அனுமதித்து 10.9.2024 அன்று ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

பள்ளி, கல்லூரி படிப்புகளுடன், மாற்றுத்திறனாளி மாணவ மாணவியர்கள் படிப்பை நிறுத்திவிடக் கூடாது என்பதற்காக அவர்கள் ஆராய்ச்சிப் படிப்புகளிலும் ஈடுபட வேண்டும் என்னும் விழைவோடு ஆராய்ச்சிப் படிப்பில் சேரும் மாற்றுத்திறனாளி மாணவமாணவியர்க்கு ஊக்கமளிப்பதற்காக அவர்களுக்கு முதலமைச்சரின் ஆராய்ச்சி உதவித் தொகை திட்டத்தின்கீழ் தலா 1 இலட்சம் ரூபாய் வீதம் 50 மாற்றுதிறனாளிகள் பயன்பெறும் வகையில் 50 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்தும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணையிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறப்பித்துள்ள இந்த ஆணைகளின் பயனாக தமிழ்நாட்டில் உள்ள மாற்றுத்திறனாளி மாணவமாணவியர் வாழ்வில் ஊக்கம் பெருகும், ஆக்கம் சேரும், உற்சாகம் பொங்கும், அறிவொளி பரவும் அவர்கள் வாழ்க்கை சிறக்கும் என்பது உறுதியாகும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# தி.மு.க. உறவை துண்டிக்குமாறு காங்கிரசில் `திடீர்' போர்க்கொடி: மூத்த தலைவர்கள் அதிர்ச்சி

சென்னை, செப். 22

தமிழ்நாட்டில் தி.மு.க. காங்கிரஸ் கூட்டணியில் இருந்தாலும் மேல் மட்டத்தில் தலைவர்களிடையே ஒருங்கிணைப்பு இருந்தாலும் கீழ் மட்டத்தில் அந்த அளவு ஒருங்கிணைப்பு இல்லை என்பது தேர்தல்காலகட்டங்களில்வெளிப்படும்.

அந்த வகையில் இப்போது அடுத்து வரப்போகும் உள்ளாட்சி தேர்தல் மற்றும் கட்சியின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக விவாதிப்பதற்காக தமிழக காங்கிரஸ் செயற்குழு மற்றும் மாநில நிர்வாகிகள், மாவட்ட தலைவர்கள் ஆலோசனை கூட்டம் சத்திய மூர்த்தி பவனில் நடத்தப்பட்டது.

காலையில் செயற்குழு கூட்டம் நடந்து முடிந்தது. மாலையில் மாவட்ட தலைவர்கள் கூட்டம் நடந்தது. கூட்டத்துக்கு மாநில தலைவர் செல்வப்பெருந்தகை தலைமை தாங்கினார்.

காங்கிரஸ் நிலை மற்றும் மக்கள் மனநிலை பற்றி பேசும்படி மாவட்ட தலைவர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அப்போது பல மாவட்ட தலைவர்கள் தங்கள் பகுதியில் தி.மு.க. காங்கிரஸ் இடையே உறவு சரியில்லை. காங்கிரசாரை மதிப்பது கூட இல்லை என்று அதிருப்தி தெரிவித்தார்கள்.

கட்சி கீழ் மட்டத்தில் இருந்து வளர உள்ளாட்சி பிரதிநிதிகள் அவசியம். உள்ளாட்சி தேர்தலில் கூடுதலான இடங்களை தலைவர்கள் கேட்டுப் பெற வேண்டும். இல்லாவிட்டால் தகுதி, செல்வாக்குக்கு ஏற்ப போட்டியிட அனுமதிக்க வேண்டும் என்றார்கள்.

நெல்லை மாவட்ட தலைவர் சங்கரபாண்டியன் பேசும் போது கடந்த பாராளுமன்ற தேர்தலில் ஏற்கனவே காங்கிரஸ் 4½ லட்சம் ஓட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற திருச்சி தொகுதியை விட்டுக்கொடுத்தது தவறு. இதனால் தி.மு.க.வுக்கு அனுசரணையாக போவது போல் கட்சியினர் பேசுகிறார்கள்.

இதே போல் தி.மு.க.வுக்கு அதிக செல்வாக்கு இருக்கும் தொகுதியை நமக்கு விட்டு தருவார்களா?

ராகுல் நெல்லைக்கு பிரசாரத்துக்கு வந்தபோது மேடையில் காமராஜர் படம், காங்கிரஸ்கொடிகூட இடம்பெறாத நிலை இருந்தது. காங்கிரஸ் காரர்களை மேடை பக்கம் கூட அனுமதிக்கவில்லை.

அதன்பிறகு மாநில தலைவரின் கவனத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு கொடிகள் கட்டப்பட்டன.

கடந்த தேர்தலில் தி.மு.க. வென்றது வெறும் 2 சதவீத வாக்கு வித்தியாசத்தில்தான். அதற்கு காரணம் ராகுலின் நடைபயணத்தால் உருவான எழுச்சிதான் என்றார்.

சில மாவட்ட தலைவர்கள் தங்கள் மாவட்டங்களில் திமு.க.வினரின் அனுமதி இல்லாமல் எந்த வேலையும் செய்ய முடிவதில்லை. காங்கிரசார் முன்னெடுக்கும் பணிகளுக்கும் முட்டுக்கட்டை போடுகிறார்கள். இதே நிலை தொடர்ந்தால் காங்கிரஸ் எப்படி வளரும் என்று ஆவேசமாக பேசினார்கள்.

கவுரவ பதவிகளை கூட காங்கிரசுக்கு தர மறுக்கிறார்கள். சம்பாதிப்பதற்கு பதவி கேட்கவில்லை. எங்கள் பகுதியில் நீண்ட காலம் கட்சியில் இருக்கிறோம். கோவில்களில் நியமிக்கப்படும் கவுரவ பதவியான அறங்காவலர்கள் பதவியை கூட வழங்குவதில்லை என்று ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்கள்.



கூட்டணி மேல் மட்டத்தில் திருப்தியாக இருந்தாலும் கீழ் மட்டத்தில் திருப்தியாக இல்லை என்பதை தங்கள் பேச்சில் வெளிப்படுத்தினார்கள்.

மாவட்ட தலைவர்களின் பேச்சுக்களை மாநில தலைவர்களும், மேலிட பொறுப்பாளர்களும் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தார்கள். கீழ் மட்டத்தில் தொடரும் அதிருப்தியை பார்த்து அவர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள்.

பின்னர் மாநில தலைவர் செல்வப்பெருந்தகை பேசும் போது, "உங்கள் பிரச்சினை களை நான் அறிவேன். இந்த மாதிரி பிரச்சினைகளுக்கு கட்சி தலைமை காரணம் அல்ல. மாவட்ட அளவில் செய்யும் தவறுகள்தான்.

எனது தொகுதியான ஸ்ரீ பெரும்புதூரில் கூட உள் ளாட்சி தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர்கள் தோற்கடிக் கப்பட்ட சம்பவம் நடந்தது.

இந்த மாதிரி நடக்கும் பிரச்சினை கள் பற்றி முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் கவனத்துக்கு எடுத்து செல்லப்பட்டு நல்ல சூழ்நிலை ஏற்படுத்தப்படும் என்றார்.

மாவட்ட அளவில் பேசும் போது, தி.மு.க. மாவட்ட செயலாளர்களுடன் பேரம் பேசி சீட் வாங்க முடிவதில்லை. குறிப்பிட்ட சதவீதத்தை பெற்றுத் தர வேண்டும் என்று பலரும் வலியுறுத்தினார்கள்.



அமைச்சர் சாமிநாதன் ஈரோடு மாவட்டம், முகாசிபிடாரியூர் ஸ்ரீ காமாட்சி அம்மன் திருமண மண்டபத்தில் பேரறிஞர் அண்ணாவின் 116வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு கைத்தறி நெசவாளர்களுக்கான மருத்துவ முகாமினை தொடங்கி வைத்து பார்வையிட்டார். உடன் கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா, திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டல குழுத்தலைவர் பத்மநாபன் உள்பட பலர் உள்ளனர்.

# அரசு வேலை வாங்கி தருவதாக பஸ் கண்டக்டரிடம் ரூ.29 லட்சம் மோசடி ஒருவர் கைது

அந்தியூர், செப். 22

ஈரோடு மாவட்டம் அந்தியூர் அடுத்த தவிட்டுப்பாளையம், பழனியப்பா தெருவை சேர்ந்தவர் சாமிக்கண்ணு (56). தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் அந்தியூர் கிளையில் பஸ் கண்டக்டராக பணிபுரிந்து வருகிறார். இவரது மகன் விஜய் பி.இ. சிவில் பட்டப்படிப்பு படித்து முடித்து விட்டு வேலைக்கு முயற்சி செய்து கொண்டிருந்தார். சாமிக்கண்ணு தனது மகன் விஜயை எப்படியாவது அரசு பணியில் சேர்த்து விட வேண்டும் என்று தீவிர முயற்சி மேற்கொண்டு வந்தார்.

இந்நிலையில் அரசு போக்குவரத்துக் கழகம் கோபி கிளையில் டிரைவராக பணிபுரிந்து வரும் கோபிசெட்டிபாளையம் பகுதியை சேர்ந்த சாமியப்பன் என்பவர் தனக்கு தெரிந்த திருவாரூர் மாவட்டத்தை சேர்ந்த மகேந்திரா ராஜா என்பவர் உங்கள் மகனுக்கு அரசு வேலை வாங்கித் தருவதாக கூறி சாமிக்கண்ணிடம், மகேந்திரராஜாவை அறிமுகம் படுத்தியுள்ளார்.

பின்னர் சில நாட்களில் மகேந்திர ராஜா தொலைபேசி மூலம் சாமிக்கண்ணுவை தொடர்பு கொண்டு உங்கள் மகனுக்கு வருமான வரித்துறையில் வேலை வாங்கித் தருவதாக கூறியுள்ளார். அதற்கு பணம் தேவைப்படுவதாகவும் கூறியுள்ளார். இதனை அடுத்து கடந்த 2022ம் ஆண்டு மே மாதம் 30ந் தேதி சாமிக்கண்ணு ரூ.15 லட்சத்தை மகேந்திர ராஜாவிடம் கொடுத்துள்ளார்.

இந்நிலையில் கடந்த ஜூன் மாதம் 27ந் தேதி சாமிக்கண்ணு மகன் விஜயை மகேந்திர ராஜா டெல்லிக்கு அழைத்துச் சென்றுள்ளார். அங்கு பணி நியமன ஆணையை அவருக்கு கொடுத்துள்ளார்.

பின்னர் மகேந்திரா ராஜா மீண்டும் கடந்த ஜூலை மாதம் 12ந் தேதி சாமிக்கண்ணிடம் இருந்து மேலும் ரூ.14 லட்சத்தை பெற்றுக்கொண்டார். மேலும் விஜய்யிடம் கொடுத்த பணி நியமன ஆணையை திரும்ப வாங்கிக்கொண்டு இமெயில் மூலம் வேலைக்கான உத்தரவு வரும் என்று கூறி உள்ளார். ஆனால் இதுவரை எந்த ஒரு உத்தரவும் வரவில்லை. இது குறித்து சாமிக்கண்ணு, சாமியப்பனிடம் கேட்டபோது அவர் காலம் தாழ்த்தி வந்தார். இதனையடுத்து தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த சாமிக்கண்ணு இது குறித்து அந்தியூர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.

அதன் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து பஸ் டிரைவர் சாமியப்பனை கைது செய்தனர். மேலும் இந்த மோசடிக்கு முக்கிய புள்ளியாக செயல்பட்ட திருவாரூர் மாவட்டத்தை சேர்ந்த மகேந்திர ராஜா தலைமறைவாகி விட்டார்.

அவரை பிடிக்க போலீசார் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். இவர்கள் இதேபோன்று வேறு யாரிடமும் மோசடியில் ஈடுபட்டார்களா என்பது குறித்தும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பயங்கர ஆயுதங்களுடன் பொதுமக்களை அச்சுறுத்திய முகமூடி கொள்ளை கும்பல் சிக்கியது

திருப்பூர், செப். 22

திருப்பூர் மாவட்டத்தில் காங்கயம், தாராபுரம், வெள்ளகோவில் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து கொள்ளை சம்பவங்கள் நடைபெற்றது. முகமூடி அணிந்து கையில் பயங்கர ஆயுதங்களுடன் வந்த கொள்ளையர்கள் இந்த சம்பவத்தில் ஈடுபட்டனர். இதனால் பொதுமக்கள் அச்சத்தில் தவித்தனர்.

இதையடுத்து கொள்ளையர்களை பிடிக்க தனிப்படை அமைக்கப்பட்டது. மேலும் துப்பாக்கியுடன் இரவு நேரங்களில் ரோந்து பணியில் ஈடுபட போலீசாருக்கு திருப்பூர் மாவட்ட எஸ்.பி., அபிஷேக் குப்தா உத்தரவு பிறப்பித்தார். இதைத்தொடர்ந்து போலீசார் இரவு முழுவதும் துப்பாக்கியுடன் ரோந்து மற்றும் வாகன தணிக்கையில் ஈடுபட்டனர். கொள்ளையர்கள் தப்பியோடும் பட்சத்தில் துப்பாக்கியால் சுட்டுப்பிடிக்கவும் உத்தரவிடப்பட்டது. எஸ்.பி.யின் இந்த உத்தரவு கொள்ளையர்கள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியது.

இந்தநிலையில் தனிப்படை போலீசார் விசாரணையில் முகமூடி கொள்ளையர்கள் சிக்கினர். அவர்களை போலீசார் ரகசிய இடத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இலக்கை அடைந்த காவேரி... கிரீன்வேஸ் To அடையாறு வரையிலான சுரங்கப்பணி நிறைவு



சென்னை, செப். 22

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், சென்னை நகரம் முழுவதும் 116.1 கி.மீ நீளத்திற்கு மூன்று வழித்தடங்களுடன் இரண்டாம் கட்ட திட்டத்தை முழு வீச்சில் செயல்படுத்தி வருகிறது.

வழித்தடம் 3இல், கிரீன் வேஸ் நிலையத்திலிருந்து அடையாறு சந்திப்பு நிலையம் வரையிலான சுரங்கப் பாதை பணிகள் பிப்ரவரி 2023இல் தொடங்கப்பட்டன. ஒவ்வொரு சுரங்கப்பாதையின் நீளமும் 1228 மீட்டர் ஆகும். சுரங்கப்பாதைகள் அடையாறு ஆற்றின் கீழ் 300 மீட்டர் நீளத்திற்கு 1013 மீட்டர் தரைமட்டத்திற்கு கீழ் செல்கின்றன. காவேரி மற்றும் அடையாறு என்ற இரண்டு பூமி அழுத்த சமநிலை (Earth Pressure Balancing EPB) சுரங்கம் தோண்டும் இயந்திரகள் இந்த பணியில் ஈடுபட்டுள்ளன. காவேரி சுரங்கம் தோண்டும் இயந்திரம் வெற்றிகரமாக சுரங்கப்பாதை பணியை முடித்துவிட்டு அடையாறு நிலையத்தை வந்தடைந்தது.

இந்த சுரங்கம் தோண்டும் இயந்திரம், சுரங்கத்தின் அடிப்பகுதி பாறை மற்றும் மேற்பகுதி மணல்போன்ற கலப்பு புவியியல் நிலைமைகளைக் கடந்து வந்துள்ளது. மேலும், அடையாறு ஆற்றின் சிலபகுதிகளின் கீழ் கடினமான பாறைகளின் வழியாகவும் சுரங்கப்பாதையை அமைத்தது. இந்த சுரங்கம் தோண்டும் இயந்திரத்தின் முகப்பில் உள்ள வெட்டும் கருவிகள் 65 முறை சீரமைக்கப்பட்டு சுரங்கம் தோண்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த பணிகளுக்கு மட்டும் 178 நாட்கள் தேவைப்பட்டது.

காவேரி சுரங்கம் தோண்டும் இயந்திரம் சில பெட்ரோல் பங்குகள், எம்.ஜி. ஆர். ஜானகி கல்லூரி, ஆந்திர சபா மருத்துவமனை, துர்காபாய் தேஷ்முக் சாலை மற்றும் அடையார் பாலம் கீழேயும் கடந்து சென்றது. இரண்டாவது சுரங்கம் தோண்டும் இயந்திரம் அடையாறு தற்போது அடையாறு நிலையத்திலிருந்து 277 மீட்டர் தொலைவில் உள்ளது மற்றும் நவம்பர் 2024க்குள் அடையாறு நிலையத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிகழ்வை, சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் அர்ச்சுனன், பொதுமேலாளர்கள் ஆண்டோ ஜோஸ் மேனாச்சேரி (சுரங்கப் பாதை கட்டுமானம்), ரவிச்சந்திரன் (சுரங்கப் பாதை கட்டுமானம்), லார்சன்&டூப்ரோநிறுவனத்தின் இயக்குநர் ஜெயராம், திட்ட இயக்குநர் அஹ்மத், பொது ஆலோசகர் நிறுவனத்தின் அணித்தலைவர் டோனி புர்செல், பொது ஆலோசகர் நிறுவனத்தின் தலைமைப் பொறியாளர் சஞ்சீவ் மண்டல், சுரங்கப் பாதை நிபுணர் ஆலன் சார்லஸ்மே, சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் மற்றும் பொது ஆலோசகர் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தளத்தில் இருந்து பார்வையிட்டனர்.

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் 2 வழித்தடம் 3ல் காவேரி எனபெயரிடப்பட்ட சுரங்கம் தோண்டும் இயந்திரம் பணியை முடித்து அடையாறு நிலையத்தை வந்தடைந்தது

# அரசின் இலவச முட்டைகள் விற்பனை: துறையூர் சத்துணவு அமைப்பாளர் சஸ்பெண்டு?



துறையூர், செப். 22

திருச்சி மாவட்டம் துறையூர் திருச்சி சாலையில் செயல்பட்டு வரும் ஸ்ரீ ரத்னா ஓட்டலில் தமிழக அரசின் மதிய உணவுத் திட்டத்திற்கு பயன்படுத்தப்படும் முட்டைகளைக் கொண்டு ஆம்லெட், ஆப்பாயில் உள்ளிட்ட உணவுப் பொருட்களை தயாரித்து விற்பனை செய்யப்படுவதாக அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது.

இதனை அடுத்து துறையூர் வட்டார வளர்ச்சி அலுவலர் நிஜாஸ்டின் ஜோ தலைமையிலான அதிகாரிகள் ஓட்டலை ஆய்வு செய்தனர்.

அப்போது ஓட்டலின் சமையலறையில் தமிழக அரசின் சார்பில் விநியோகம் செய்யப்படும் 111 முட்டைகளைப் பதுக்கி வைத்திருப்பது தெரிய வந்தது. இதனைத் தொடர்ந்து இச்சம்பவம் தொடர்பாக வட்டார வளர்ச்சி அலுவலர் துறையூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்த துறையூர் போலீசார் ஒஓட்டல் உரிமையாளரான தேவரப்பம்பட்டி கிராமத்தை சேர்ந்த ரத்தினம் (46) என்பவரை கைது செய்து விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில் ரத்தினம் மதுராபுரி அரசு ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் சத்துணவு அமைப்பாளராக பணிபுரிந்து வரும் வசந்தகுமாரி (58) என்பவரிடமிருந்து பள்ளி குழந்தைகளுக்கு விநியோகம் செய்யப்படும் முட்டைகளை குறைந்த விலைக்கு சட்டவிரோதமாக வாங்கி பயன்படுத்தியதாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்.

அவர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் சத்துணவு அமைப்பாளரான வசந்த குமாரியையும் துறையூர் போலீசார் கைது செய்தனர். பின்னர் இருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இதை தொடர்ந்து வசந்த குமாரி திருச்சி மகளிர் சிறையிலும், ரத்தினம் துறையூர் கிளை சிறையிலும் அடைக்கபட்டனர். தொடர்ந்து உணவு பாதுகாப்பு துறையினர் ஓட்டலை ஆய்வு செய்ததில், சுகாதாரமற்ற முறையில் ஓட்டலை பராமரித்தது தெரியவந்தது.

இதை அடுத்து, உணவு பாதுகாப்புத் துறையினர் வட்டாட்சியர் உதவியுடன் ஓட்டலை மூடி சீல் வைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே அரசின் இலவச முட்டைகள் ஓட்டலுக்கு சப்ளை செய்யப்பட்டது தொடர்பாக உயர் அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்கள். இது தொடர்பாக சத்துணவு அமைப்பாளர் மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர்.

இதனால் அவர் மீது சஸ்பெண்டு நடவடிக்கை பாயும் என அரசு துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

# உஷார்... போலி வங்கி கணக்கு தொடங்கி ஏமாற்ற முயற்சி: சென்னையில் அரங்கேறும் புது வகை மோசடி

சென்னை, செப். 22

ஆன்லைன் வழியாக பணம் செலுத்துவது பொருட்களை ஆர்டர் செய்வது போன்ற செயல்பாடுகள் மக்கள் மத்தியில் அதிகரிக்கத் தொடங்கிய பிறகு ஆன்லைன் மோசடிகளும் அதிக அளவில் நடைபெற தொடங்கிவிட்டன.

உங்களது பெயரில் போதைப் பொருள் பார்சல் அனுப்பப்பட்டுள்ளது. "நாங்கள் சொல்வது போன்று கேட்காவிட்டால் நீங்கள் சிறைக்கு செல்ல நேரிடும்" என்று எச்சரிக்கும் மோசடி பேர் வழிகள் தங்களை சைபர் கிரைம் போலீசார் என்று மிரட்டி அவர்களது வங்கிக் கணக்கில் இருந்து லட்சக்கணக்கில் பணத்தை சுருட்டுவது ஒரு பக்கம் அரங்கேறிக் கொண்டே இருக்கிறது.

இதில் இருந்து பொது மக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள போலீசார் பல்வேறு அறிவுரைகள் மற்றும் விழிப்புணர்வு பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறார்கள்.

இருப்பினும் ஆன்லைன் மோசடி நபர்களை கட்டுப்படுத்தவே முடியவில்லை நாடு முழுவதுமே வெளிநாடுகளில் இருந்து செயல்படும் ஆன்லைன் மோசடிக் கும்பல் போலீசாருக்கு பெரும் சவாலாகவே இருந்து வருகிறது.

அந்த வகையில் தமிழக வாலிபர்களை குறிவைத்து புதுவிதமான மோசடி ஒன்றை வெளிநாட்டு கும்பல் அரங்கேறத் தொடங்கி இருக்கிறது. கம்போடியா, மியான்மர் உள்ளிட்ட வெளிநாடுகளில் இருந்து செயல்படும் ஆன்லைன் மோசடி கும்பலை சேர்ந்தவர்கள் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் புதிதாக இந்த மோசடியை அரங்கேற்றி வருகிறார்கள். திருவொற்றியூர், அம்பத்தூர் உள்ளிட்ட புறநகர் பகுதிகளிலும், திருவள்ளூர், வேலூர் மாவட்டங்களிலும், சென்னை மாநகரிலும் இந்த மோசடி அரங்கேறி இருக்கிறது.

இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களை மூளைச் சலவை செய்து போலியாக வங்கிக் கணக்கை தொடங்க செய்யும் மோசடிக் கும்பலின் ஏஜெண்டுகள் இதற்காக ரூ.20 ஆயிரம் வரையில் பணம் கொடுத்து ஆசை காட்டுகிறார்கள்.

இப்படி தொடங்கப்படும் போலி கணக்குகளுக்காக போலியான கம்பெனி முகவரியுடன் கூடிய அலுவலகங்களையும் தயார் செய்து மோசடி பேர் வழிகள் ஆட்களை பிடித்து வருகிறார்கள்.

இந்த வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்ட பின்னர் அதில் லட்சக்கணக்கில் மோசடி பணத்தை டிரான்ஸ்பர் செய்யும் மோசடிக் கும்பல் அந்த பணத்தை சுருட்டிக் கொண்டு தலைமறைவாகி விடுகிறது.

இதன் பிறகே தாங்கள் ஏமாற்றப்பட்டது உள்ளூர் வாலிபர்களுக்கு தெரிய வருகிறது. அவர்களும் சிக்கலில் மாட்டிக் கொள்கிறார்கள். இது தொடர்பாக சென்னையில் மட்டும் 250 வழக்குகள் பதிவாகி உள்ளன.

புறநகர் பகுதிகளில் உள்ள போலீஸ் நிலையங்களிலும் வழக்குகள் போடப்பட்டுள்ளன. எனவே புதிய கணக்கு தொடங்குங்கள் உங்களுக்கு பணம் கிடைக்கும் என்று யாராவது நாடினால் பொதுமக்கள் உஷாராக இருக்க வேண்டும். இல்லை யென்றால் நீங்கள் சிக்கலில் மாட்டி சிறை செல்ல நேரிடும் என்று போலீசார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# அ.தி.மு.க.வை முடக்க நினைக்கும் தி.மு.க. அரசின் நாட்கள் எண்ணப்படுகின்றன: எடப்பாடி பழனிசாமி



சென்னை, செப். 22

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

அமைச்சரும், சட்டமன்ற எதிர்க்கட்சி கொறடாவுமான எஸ்.பி.வேலுமணி, சென்னை மாநகராட்சி பொறியாளர்கள் உள்ளிட்ட பலர் மீது, தனியார் அமைப்பு பல ஆண்டுகளுக்கு முன்பு அனுப்பிய ஆதாரமற்ற புகாரின் அடிப்படையில் தி.மு.க. அரசு, தனது லஞ்ச ஒழிப்புத் துறை மூலம் வழக்குப்பதிவு செய்து உள்ளது.

தி.மு.க. அரசின் அமைச்சர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு ஊழல் வழக்குகள் 10 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வந்த நிலையில், 2021 ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத்துறை அடித்த அந்தர் பல்டியைப் பார்த்த சென்னை உயர்நீதிமன்றமே, தன்னிச்சையாக இவ்வழக்குகளை மீண்டும் விசாரித்து வருவதில் இருந்தே, முதலமைச்சரின் ஏவல்துறை எப்படி செயல்பட்டு வருகிறது என்பதைத் தமிழக மக்கள் அனைவரும் நன்கு அறிவார்கள்.

தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் 2021ம் ஆண்டு பெய்த எஸ்.பி.வேலுமணி உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, சென்னை மாநகராட்சியின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

மழைநீர் சேகரிப்பின் காரணமாக சென்னையின் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்ததை சென்னை மாநகர மக்கள் நன்கு அறிவார்கள். அனைத்து மழைநீர் வடிகால் கால்வாய்களும் பருவ மழைக்கு முன்பே தூர் வாரப்பட்டதன் காரணமாகவும், சென்னை சாலைகளில் மழைநீர் வடிகால் கட்டமைப்பு அமைக்கப்பட்டதன் காரணமாகவும், கன மழையின்போது சென்னை சாலைகளில் மழைநீர் தேங்குவது பெரிய அளவு குறைந்தது. தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் 2021ம் ஆண்டு பெய்த பருவமழைக்கே சென்னை வெள்ளத்தில் மிதந்தது. விரைவில் பருவமழையை சென்னை மாநகரம் எதிர்கொள்ள உள்ளது. கடந்த 40 மாத கால தி.மு.க. ஆட்சியில் ஒவ்வொரு ஆண்டும் மழைநீர் வடிகால் பணிகள், தூர் வாருதல் பணிகள் மற்றும் சாலைகளை சீரமைத்தல் பணிகளுக்காக பல ஆயிரம் கோடி ரூபாய் செலவிட்டதாகக் கூறும் தங்களது வேஷம் கலைந்துவிடுமோ என்றும், தி.மு.க. ஆட்சியின் மீது கூறப்படும் 4 ஆயிரம் கோடி ரூபாய் பற்றிய புகார்கள் மீண்டும் தமிழக மக்கள் மத்தியில் பேசப்படுமோ! தங்களின் ஊழல்கள் அம்பலப்பட்டு விடுமோ! என்ற பயம் முதலமைச்சர் ஸ்டாலினுக்கு ஏற்பட்டுள்ளது.

"மின்கட்டண உயர்வு, சொத்துவரி உயர்வு, பத்திரப் பதிவு கட்டண உயர்வு உள்ளிட்ட அரசின் அனைத்துக் கட்டணங்களும் பலமடங்கு உயர்வு, உணவுப் பொருட்கள், கட்டுமானப் பொருட்கள் கடுமையான விலை உயர்வு, சட்டம்ஒழுங்கு சீர்கேடு, கொலை, கொள்ளை, கள்ளச்சாராயம், தமிழகத்தை கஞ்சா மற்றும் போதைப்பொருள் கேந்திரமாக மாற்றிய பெருமை" என்று தி.மு.க. அரசின் மீது கோபத்தின் உச்சியில் இருக்கும் தமிழக மக்களின் கவனத்தை திசை திருப்ப, தனது கண் அசைவுக்கு தாளம் போடும் லஞ்ச ஒழிப்புத் துறையை ஏவி விட்டிருக்கிறார் தி.மு.க. அரசின் முதலமைச்சர் ஸ்டாலின்.

இது போன்ற தகிடுதத்தங்களால் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வை முடக்கிவிடலாம் என்று ஸ்டாலின் மனப்பால் குடிக்கிறார்.

தி.மு.க. ஆட்சியின் ஆயுட் காலம் 19 அமாவாசைகள்தான். நாட்கள் எண்ணப்படுகின்றன. சர்வாதிகார ஆட்சி நடத்தியதற்காக மக்களிடம் பதில் சொல்லும் நாட்கள் வெகு தூரத்தில் இல்லை என்று எச்சரிக்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி வீட்டில் சோதனை நடத்த லஞ்ச ஒழிப்பு: போலீஸ் ஆலோசனை



சென்னை, செப். 22

சென்னை மாநகராட்சியில் மழைநீர் வடிகால் பணிகள் அமைத்ததில் ரூ.536 கோடி ஊழல் நடைபெற்றுள்ளதாக அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலு மணி உள்பட 11 பேர் மீது லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

அறப்போர் இயக்கத்தை சேர்ந்த ஜெயராம் வெங்கடேஷ் என்பவர் கடந்த 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் லஞ்ச ஒழிப்புதுறையில் அளித்திருந்த புகாரில் மழைநீர் வடிகால் பணிகள் அமைத்ததில் ரூ.290 கோடி மற்றும் சாலைகள் சீரமைப்பு பணிக்காக ரூ.246.39 கோடி மதிப்பிலான பணிகளை ஒப்பந்தம் விட்டதில் பெரிய அளவில் முறைகேடு நடந்திருப்பதாக தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாகவே எஸ்.பி. வேலுமணி மற்றும் மாநகராட்சி என்ஜினீயர்கள் உள்பட 10 பேர் மீதும் லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

இதைத்தொடர்ந்து எஸ்.பி. வேலுமணி உள்பட 11 பேரின் வீடுகளில் விரைவில் சோதனை நடத்த லஞ்ச ஒழிப்பு போலீசார் முடிவு செய்துள்ளனர்.

முறைகேடு தொடர்பான ஆவணங்களை சரிபார்த்தே வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ள போலீசார் எஸ்.பி. வேலுமணி உள்ளிட்ட 11 பேரின் வீடுகளிலும் விரைவில் சோதனை நடத்துவது பற்றி உயர் அதிகாரிகளின் உத்தரவுக்காக காத்திருக்கிறோம் என்றனர் .

இதுபோன்ற ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த உடனேயே சம்பந்தப்பட்டவர்களின் வீடுகளில் சோதனை நடத்தப்படுவது வழக்கம்.

ஆனால் எஸ்.பி. வேலுமணி மீது வழக்கு போடப்பட்டுள்ள நிலையிலும் சோதனை எதுவும் நடைபெறவில்லை. இது தொடர்பாக லஞ்ச ஒழிப்பு போலீஸ் அதிகாரி ஒருவர் கூறும் போது, எஸ்.பி. வேலுமணி உள்பட 11 பேரின் வீடுகளிலும் சோதனை நடத்துவது தொடர்பாக தீவிரமாக ஆலோசித்து வருகிறோம். அது பற்றி விரைவில் முடிவெடுத்து சோதனை நடத்துவோம் என்று தெரிவித்தார்.

# குடியாத்தம் அருகே 2 சிறுவர்கள் கொலை கட்டிட ஒப்பந்ததாரர் கைது

குடியாத்தம், செப். 22

வேலூர் மாவட்டம் குடியாத்தம் அருகே 2 சிறுவர்கள் கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கொலை தொடர்பாக கட்டிட ஒப்பந்ததாரரை போலீசார் கைது செய்துள்ளனர்.

யோகராஜின் மகன்களான யோகித் (5), தர்ஷன் (4) ஆகிய சிறுவர்களை கடைக்கு அழைத்து செல்வதாக கூறி கட்டிட ஒப்பந்ததாரரான நண்பர் வசந்த குமார் அழைத்து சென்றுள்ளார்.

வசந்தகுமார், சிறுவர்களை அழைத்து சென்று வெகு நேரமாகியும் வீடு திரும்பாததால் பெற்றோர் தேடியுள்ளனர். அப்போது அப்பகுதியில் உள்ள கோவில் அருகாமையில் இருந்து சிறுவர்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டது. இதையடுத்து போலீசாருக்கு அளித்த தகவலின் பேரில் போலீசார் விரைந்து வந்து விசாரணை நடத்தி வசந்த குமாரை கைது செய்தனர்.

மனைவியை பிரிந்து சில மாதங்களாக வசந்தகுமார் மன அழுத்தத்தில் இருந்து வந்ததாக கூறப்படுகிறது.

இதனிடையே சிறுவர்களின் உடல்கள் கோவில் அருகாமையில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளதால் நரபலி முயற்சி நடந்திருக்கலாம் என உறவினர்கள், பொது மக்களுக்கு சந்தேகம் எழுந்துள்ளது.

# நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் வளர்ச்சி பணிகள் குறித்து துறைச்சார்ந்த அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம்

ஊட்டி, செப். 22

நீலகிரி மாவட்டம், உதகை, தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் தலைமையில், ஊரக வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் பேரூராட்சிகள் ஆகிய துறைகளின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் வளர்ச்சி பணிகள் குறித்து துறைச்சார்ந்த அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலை வகித்தார்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் தமிழ்நாடு முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள் அறிவித்த திட்டங்களின் தற்போதை நிலை மற்றும் முன்னேற்றம் குறித்தும், ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில், கலைஞரின் கனவு இல்லத்திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம், முதல்வரின் கிராம சாலைகள் திட்டம் உள்ளிட்ட திட்டப்பணிகள் குறித்தும், பேரூராட்சிகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம்,



அம்ரூத் 2.0 குடிநீர் திட்டப்பணிகள் உள்ளிட்ட திட்டப்பணிகள் குறித்தும், நகராட்சி நிர்வாகம் சார்பில் கலைஞர் நகர்ப்புற மேம்பாடு திட்டம், 15வது நிதிக்குழு மானியத்திட்டம், சுவச் பாரத் மிஷன் திட்டம், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம், சிறப்பு பகுதி மேம்பாடு திட்டம் உள்ளிட்ட திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப்பொறுப்பேற்றது முதல் பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சித்திட்டப் பணிகளை அறிவித்து, அதனை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக நமது மாவட்டத்தில் சுற்றுலாத்தளங்கள் அதிகமாக உள்ளதால், சுற்றுலா பயணிகள் வருகை ஆண்டுதோறும் அதிகரித்து கொண்டேயிருக்கிறது. இதன்மூலம் உள்ளூர் வியாபாரிகளின் வாழ்வாதாரம் முன்னேற்றம் அடைந்து வருகிறது.

மேலும், நமது மாவட்டத்திலுள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சிகளில் நடைபெற்று வரும் பணிகள் குறிப்பிட்ட காலத்திற்குள் தரமாக முடித்து, பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் திட்டமிட்டு செயல்பட வேண்டும். மக்களின் அடிப்படை தேவைகளான சாலை வசதி, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மீது சம்மந்தப்பட்ட அலுவலர்கள் தனிகவனம் செலுத்தி, அப்பணிகளை விரைவாக மேற்கொள்ள வேண்டும். அரசின் அனைத்து திட்டங்களும் பொதுமக்களுக்கு உரிய நேரத்தில் சென்றடையும் வகையில் துறை அலுவலர்கள் முழு ஈடுபாட்டுடன் பணியாற்ற வேண்டும் என சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக் தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) கல்பனா, உதவி இயக்குநர்கள் முகமது ரிஸ்வான் (பேரூராட்சிகள்), சரவணன் (ஊராட்சிகள்), நகர மன்றத்தலைவர்கள் வாணீஷ்வரி (உதகை), சுசீலா (குன்னூர்), நகராட்சி ஆணையாளர்கள் ஜஹாங்கீர் பாஷா (உதகை), சசிகலா (குன்னூர்), முனியப்பன் (கூடலூர் (பொ) (ம) நெல்லியாளம்), ஊராட்சி ஒன்றியத்தலைவர்கள் மாயன் (எ) மாதன் (உதகை), சுனிதா நேரு (குன்னூர்), திட்டக்குழு உறுப்பினர் விசாலாட்சி, பேரூராட்சி செயல் அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தீ விபத்தில் ஓர்க்ஷாப்பில் நிறுத்தியிருந்த 14 வாகனங்கள் எரிந்து நாசம்

விருதுநகர், செப். 22

விருதுநகர்கச்சேரிரோட்டில் செய்யது அகமது என்பவருக்கு சொந்தமான இருசக்கர வாகன மெக்கானிக் ஓர்க்ஷாப் அமைந்துள்ளது. இந்த ஓர்க்ஷாப் முன்பு பழுது நீக்குவதற்காக வாடிக்கையாளர்களிடம் இருந்து பெறப்பட்ட 14 இரு சக்கர வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தன.

மேலும் அங்கு 5 ஜெனரேட்டர்கள், 5 பேவர் பிளாக்கல் பதிக்கும் மெஷின்கள், 4 வாட்டர் பம்புகள், 3 கரும்புச் சாறு எடுக்கும் எந்திரங்கள், ஒருகளை வெட்டும் கருவி உள்ளிட்டவைகளும் வைக்கப்பட்டு இருந்தன.



இந்தநிலையில் இன்று அதிகாலை 4 மணி அளவில் திடீரென அங்கு நின்று கொண்டிருந்த ஒரு வாகனத்தில் தீப்பிடித்தது. அந்த பகுதியில் காற்று பலமாக வீசியதால் அடுத்தடுத்த வாகனங்களிலும் தீயானது பரவி பற்றி எரியத்தொடங்கியது.

உடனே சாலையில் சென்றவர்கள் இதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். பின்னர் அவர்கள் விருதுநகர் தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் கொடுத்தனர். தீயணைப்பு வீரர்கள் 10க்கும் மேற்பட்டோர் விரைந்து வந்து நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர்.

இந்த விபத்தில் அனைத்து இரு சக்கர வாகனங்கள், பழுது நீக்க வைக்கப்பட்டிருந்த எந்திரங்கள் முழுவதும் தீயில் எரிந்தது.

இதுகுறித்து விருதுநகர் மேற்கு போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை மேற்கொண்டனர். மின்கசிவின் காரணமாக தீப்பிடித்து எரிந்ததாக கூறப்படுகிறது. தொடர்ந்து விபத்துக்கான காரணம் குறித்து போலீசார் விசாரித்து வருகிறார்கள்.

# மாணவிக்கு வளைகாப்பு ரீல்ஸ் விவகாரம்: ஆசிரியர்கள் வகுப்பறையை விட்டு வெளியேற தடை

வேலூர், செப். 22

வேலூரில் உள்ள அரசு பெண்கள் மேல் நிலைப் பள்ளியில் மேல்நிலை வகுப்பு படிக்கும் மாணவிகள் சிலர் இன்ஸ்டாகிராமில் ரீல்ஸ் வீடியோ பகிர்வதை வழக்கமாக கொண்டிருக்கின்றனர்.

இந்த பழக்கத்துக்கு ஆளான மாணவிகள், பள்ளி வளாகத்தில் சக மாணவிக்கு வளைகாப்பு விழா நடத்தி ரீல்ஸ் வீடியோவாக இன்ஸ்டாகிராமில் பதிவேற்றம் செய்தனர்.

இந்த விழாவுக்கு அழைப்பிதழையும் வடிவமைத்து அதில் பகிர்ந்தனர். இந்த விவகாரம் வேலூரில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியது. இதனை தொடர்ந்து மாவட்ட கல்வி அலுவலர் மோகன் சம்பந்தம்பட்ட பள்ளிக்கு சென்று விசாரணை நடத்தினார். அதில் வீடியோ வெளியிட்ட



மாணவிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

அப்போது மாணவிகள் தெரியாமல் செய்து விட்டோம் என கூறினர்.

இதைத்தொடர்ந்து, வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் நிதி உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுடன் ஆன்லைன் மூலம் அவசர கூட்டம் நடந்தது.

இதில் முதன்மை கல்வி அலுவலர் மணிமொழி தலைமை ஆசிரியர்களுக்கு அதிரடி உத்தரவுகளை பிறப்பித்தார். அவர் கூறியதாவது:

பள்ளிக்கு வரும் மாணவ, மாணவிகள் புத்தகப்பைகளில் கத்தி, செல்போன் போன்று தேவையில்லாத பொருட்கள் எடுத்து வருகிறார்களா என்பதை தினமும் சோதனை செய்ய வேண்டும்.

வகுப்பறைகளில் ஆசிரியர்கள் கட்டாயம் இருக்க வேண்டும். ஆசிரியர்கள் விடுமுறையில் சென்றிருந்தால், அவர்களின் வகுப்பறையில் வேறு ஆசிரியர் இருக்க வேண்டும்.

பள்ளிகளில் ஏதாவது நேர்ந்தால் சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களே பொறுப்பு என்பதை கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும். மதிய உணவு இடைவேளையின்போது ஆசிரியர் ஓய்வு அறைக்கு செல்லாமல், வகுப்பறைகளிலேயே அமர்ந்து சாப்பிட வேண்டும்.

மேலும் பள்ளிக்கு மாணவ, மாணவிகள் எந்த காரணத்தை கொண்டும் செல்போன்கள் எடுத்து வர கூடாது.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த உத்தரவுகளை இன்று முதலே பின்பற்ற வேண்டும் என அதிகாரிகள் சார்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# மின்சாரம் தாக்கி மயங்கிய காகத்திற்கு மறுஉயிர் கொடுத்த தீயணைப்பு வீரர்



கோவை, செப். 22

கோவை மாவட்டம், கவுண்டம்பாளையத்தில் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம் செயல்பட்டு வருகிறது.

இதன் அருகே டிரான்ஸ்பார்மர் (மின்மாற்றி) ஒன்றும் உள்ளது. சம்பவத்தன்று மின்மாற்றியின் மீது காகம் ஒன்று அமர்ந்திருந்தது.

அப்போது எதிர்பாராத விதமாக காகத்தின் மீது மின்சாரம் தாக்கியது. இதில் காகம் சாலையில் தூக்கி வீசப்பட்டு மயங்கிய நிலையில் கிடந்தது.

இதனை தீயணைப்பு நிலையத்தில் பணியில் இருந்த வெள்ளத்துறை என்ற தீயணைப்பு வீரர் பார்த்தார். உடனடியாக ஓடி சென்று அவர், காகத்தை தூக்கி பரிசோதித்து பார்த்தார்.

அப்போது காகம் இதயத்துடிப்பு இல்லாமல் இருந்தது தெரியவந்தது. இதையடுத்து, காகத்திற்கு மீண்டும் இதயத்துடிப்பை வரவைப்பதற்காக, தீயணைப்பு வீரர் வெள்ளத்துரை சி.பி.ஆர் எனப்படும் முதலுதவி சிகிச்சை செய்தார்.

பின்னர், காகத்தின் வாயில் காற்றை ஊதினார். இதில் சிறிது நேரத்தில் காக்கை உயிர் பிழைத்தது. தொடர்ந்து,அந்தகாகத்தை அழைத்துச்சென்று தீயணைப்பு நிலைய வளாகத்தில் உள்ளநிழல் பகுதியில் விட்டனர்.

சிறிது நேரத்தில் இயல்பு நிலைக்குத் திரும்பிய அந்த காகம் அங்கிருந்து பறந்து சென்றது. மின்சாரம் தாக்கி மயங்கி விழுந்த காகத்தை தீயணைப்பு வீரர் ஒருவர், சி.பி.ஆர். சிகிச்சை செய்து காப்பாற்றிய சம்பவம் கோவையில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பான வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. இதனை பார்த்த பொதுமக்கள் பலரும், காகத்தை காப்பாற்றிய தீயணைப்பு வீரர் வெள்ளத்துரைக்கு பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

# 75 வயது மூதாட்டியை கற்பழித்து கொன்ற பேரன்

எடப்பாடி, செப். 22

சேலம் மாவட்டம் எடப்பாடி அடுத்த ஆலச்சம்பாளையம், காளி கவுண்டன் கொட்டாய் பகுதியைச் சேர்ந்தவர் ரங்ககவுண்டர். இவரது மனைவி வள்ளியம்மா (75), இவர்களுக்கு 4 மகள்கள் ஒரு மகன் உள்ளனர்.

வள்ளியம்மாளின் கணவர் இறந்துவிட்ட நிலையில், வள்ளியம்மாள் தனக்கு சொந்தமான வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளார், விவசாய கூலி வேலை செய்து வந்த வள்ளியம்மாள் வழக்கம் போல் சாப்பிட்டுவிட்டு படுக்க சென்று நிலையில் சுமார் 8 மணி அளவில் அவர் வீட்டு முன் அறையில் ரத்த காயங்களுடன் பிணமாக கிடந்தார். இதைப்பார்த்து அதிர்ச்சி அடைந்த அக்கம், பக்கத்தினர் இது குறித்து எடப்பாடி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.



இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற போலீசார், வள்ளியம்மாளின் உடலை கைப்பற்றி, பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் கொலை நடந்த நேரத்தில் வள்ளியம்மாளின் வீட்டிற்கு வந்து சென்றவர்கள் குறித்து விசாரணை மேற்கொண்டனர். அப்போது கொலை செய்யப்பட்ட வள்ளியம்மாளின் மகள் சின்னப்பொண்ணுவின் மகன் விக்னேஷ் (22) குடிபோதையில் வள்ளியம்மாளின் வீட்டிற்கு வந்து சென்றது தெரிய வந்தது. இதனை அடுத்து விக்னேஷை பிடித்து போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டனர்.

போலீசாரின் விசாரணையில் மது போதையில் இருந்த விக்னேஷ் தனது பாட்டி வள்ளியம்மாள் வீட்டிற்கு சென்றதும், அங்கு அவரை பலவந்தப்படுத்தி கற்பழித்த நிலையில், அவர் சத்தம் போடவே அவரை தாக்கியதால் அவர் பலத்த காயமடைந்து உயிரிழந்ததையும் ஒப்புக்கொண்டார்.

இதனைஅடுத்துஅவரை கைது செய்த எடப்பாடி போலீசார் அவரிடம் தொடர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

75 வயதான பாட்டியை பேரனே கற்பழித்து கொலை செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# இலங்கைக்கு கடத்த முயன்ற ரூ.15 லட்சம் மதிப்புள்ள பீடி இலை மூட்டைகள் பறிமுதல்



தூத்துக்குடி, செப். 22

தூத்துக்குடி வடபாகம் போலீஸ் நிலைய எல்லைக்கு உட்பட்ட திரேஸ்புரம் கடற்கரை பகுதி வழியாக பீடி இலை மூட்டைகள் இலங்கைக்கு படகு மூலம் கடத்த இருப்பதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதனைத் தொடர்ந்து தூத்துக்குடி கியூ பிரிவு இன்ஸ்பெக்டர் விஜய அனிதா தலைமையில் சப் இன்ஸ்பெக்டர் ஜீவமணி தர்மராஜ், சிறப்பு சப் இன்ஸ்பெக்டர் ராமர், தலைமை காவலர் இருதய ராஜ் குமார் மற்றும் காவலர் பழனி பாலமுருகன் ஆகியோர் கடற்கரைப் பகுதியில் நள்ளிரவில் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது திரேஸ்புரம் கடற்கரை வடபகுதியில் அதிகாலை சந்தேகத்திற்கு இடமாக நின்றிருந்த மினி லாரியை போலீசார் சோதனை செய்தனர்.

அப்போது அதில் 30 கிலோ எடை கொண்ட 42 பீடி இலை மூட்டைகள் இருந்தது தெரிய வந்தது. இதனை தொடர்ந்து நடத்திய விசாரணையில் மினி லாரி மூலம் பீடி இலை மூட்டைகளை கொண்டு வந்து இலங்கைக்கு படகு மூலம் கடத்த முயன்றது தெரிய வந்தது. கடத்தலில் ஈடுபட்டவர்கள் போலீசார் வருவதை தெரிந்து கொண்டு தப்பி ஓடி விட்டனர்.

இதனைத் தொடர்ந்து ரூ.15 லட்சம் மதிப்புள்ள பீடி இலை மூட்டைகள் மற்றும் மினி லாரியை பறிமுதல் செய்த போலீசார் தப்பி ஓடியவர்கள் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திண்டுக்கல் மாவட்டத்தில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழிகாட்டுதலின்படி

## கொடைக்கானல் பகுதியில் நெகிழி பாட்டில் ஒன்றுக்கு ரூ.20 பசுமை வரி விதிப்பு

திண்டுக்கல், செப். 22

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் மலைகளின் இளவரசியாக திகழ்கிறது. பருவகாலம் மட்டுமின்றி தினசரி ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் பல்வேறு மாவட்டம், மாநிலம், நாடுகளிலிருந்து வருகை தருகின்றனர். இதமான குளுமையும், இயற்கை எழிலும் நிரம்பிய கொடைக்கானல் மலையின் பசுமையை, சுற்றுச்சூழலை காக்க, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் நெகிழி இல்லா பசுமை கொடைக்கானலை உருவாக்க 5 லிட்டருக்கு குறைவான அனைத்து நெகிழி தண்ணீர் பாட்டில்கள், நெகிழியில் அடைக்கப்பட்ட அனைத்து வகையான குளிர்பானங்கள் தடை செய்யப்பட்டுள்ளது.

கொடைக்கானல் மலைப்பகுதியில் நெகிழி பாட்டில்களின் பயன்பாடு மற்றும் விற்பனையை தடுக்க மாவட்ட, வட்டார அளவில் அரசு அலுவலகங்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளை கொண்ட கண்காணிப்பு குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இக்கண்காணிப்பு குழுவினர் ஒவ்வொரு வாரம்/ மாதமும் கடைகள், வியாபார நிறுவனங்களுக்கு சென்று நெகிழி பயன்பாடு, விற்பனை குறித்து திடீர் ஆய்வு மேற்கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், அபராதம் விதித்தல், சீல் வைத்தல் உள்ளிட்ட நெகிழி தடுப்பு பணிகளை செய்து வருகின்றனர்.

கொடைக்கானல் நுழைவு வாயில் பகுதியில் நெகிழி தடுப்பு சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு, தமிழ்நாடு காவல்துறையினர், வனத்துறையினர், நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறையினர் இணைந்து கொடைக்கானல் பகுதிக்கு நெகிழி பாட்டில்கள் கொண்டு செல்வதை தடுக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் 28.06.2024 தேதிய விசாரணை அறிக்கையில், கொடைக்கானல் மலைப் பகுதியில் நெகிழி பாட்டில்கள் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டதுடன், நெகிழி பாட்டில்களை விற்று வரும், பயன்படுத்தும், விற்பனை செய்யும் தனிநபர், வியாபாரிகள், பொதுமக்கள், சுற்றுலா பயணிகளுக்கு அபராதம் விதிக்கும் வகையில் ஒரு நெகிழி பாட்டில்களுக்கு ரூ.20 பசுமை வரி விதிக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது.

இதனை அடிப்படையாக கொண்டு கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 15 கிராம ஊராட்சிகளின் கிராம சபை கூட்டத்திலும் 5 லிட்டருக்கு குறைவான நெகிழி தண்ணீர் பாட்டில்கள், அனைத்து வகையான நெகிழி குளிர்பான பாட்டில்கள் வைத்திருத்தல், பயன்படுத்துதல், விற்பனை செய்தல் போன்றவற்றிற்கு நெகிழி பாட்டில் ஒன்றுக்கு ரூ.20 அபராதம் விதிக்கும் வகையிலான பசுமை வரி விதிக்க ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனவே, நம்மை மகிழ்விக்கும் கொடைக்கானலின் பசுமையை, சுற்றுச்சூழலை பாதுகாத்து வளமாக்கிட அனைத்து பொதுமக்கள், சுற்றுலா பயணிகள், சிறு குறு வியாபார நிறுவனங்கள், கடை உரிமையாளர்கள் உள்ளிட்ட அனைவரும் ஒத்துழைப்பு நல்கிட வேண்டும், என மாவட்ட கலெக்டர் மொ.நா.பூங்கொடி தெரிவித்துள்ளார்.



கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தில் பெண் குழந்தைகளின் பிறப்பை கொண்டாடும் வகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் 2 பெண் குழந்தைகளை பெற்ற பெற்றோர்களுக்கு குழந்தைகளை பெற்ற பெற்றோர்களுக்கு குழந்தைகள் நல பெட்டகத்தை வழங்கினார்.

# பாரதிய மஸ்தூர் சங்கம் சார்பில் குறைந்தபட்ச பென்ஷன் ரூ.5000மாக உயர்த்தி வழங்கக்கோரி ஆர்ப்பாட்டம்

தஞ்சாவூர், செப்.22

தஞ்சை மருத்துவ கல்லூரி சாலையில் உள்ள வருங்கால வைப்பு நிதி அலுவலகம் முன்பு பாரதிய மஸ்தூர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்தியற்கு மாவட்ட அமைப்பாளர் பார்த்தசாரதி தலைமை தாங்கினார். மாநிலத் துணைத் தலைவர் பாலகுமாரன் முன்னிலை வகித்தார். டாஸ்மாக் பாரதிய மஸ்தூர் சங்கத்தின் மாநிலத் தலைவர் நாகராஜன் சிறப்புரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் குறைந்தபட்ச பென்ஷன் தொகை ரூ.1000லிருந்து ரூ.5000மாக உயர்த்தி வழங்க வேண்டும். பென்ஷன் கணக்கிடும் முறையை மாற்றி அமைக்க வேண்டும். வருங்கால வைப்பு நிதி பென்சன்தாரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் மருத்துவ சிகிச்சை பெற்றிட வழிவகை செய்ய வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன. இதில் டாஸ்மாக் பாரதிய மஸ்தூர் சங்கம் மாநில பொதுச்செயலாளர் கோபு, மாநில செயலாளர் ரமேஷ், மாவட்டத் தலைவர் சுரேஷ், பாரதிய மஸ்தூர் சங்க மாவட்ட இணை அமைப்பாளர் பாரதி மோகன், மாவட்ட செயலாளர் பாலசுப்பிரமணியன், டி.என்.சி.சி. சுந்தர்ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




# கரூர் மாவட்ட காவிரிக்கரையில் 22 இடங்களில் 26,000 பனை விதைகள் நடும் நெடும் பணி: கலெக்டர் தொடங்கி வைத்தார்

கரூர், செப். 22

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், கடம்பர் கோவில் காவிரி கரையோரத்தில் பனைவிதைகள் நடும் நெடும் பணியை மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல் பனைவிதைகளை நடவு செய்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்சியில் குளித்தலை சட்ட மன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம் முன்னிலை வகித்தார்.

கரூர் மாவட்டம் புகலூர் வட்டம் நொய்யல் மற்றும் தவுட்டுபாளையம் காவிரி கரையோர பகுதியில் அரவக்குறிச்சி சட்ட மன்ற உறுப்பினர் ஆர். இளங்கோ, கிருஷ்ணராயபுரம் வட்டம் திருக்காம்புலியூர் காவிரி கரையோர பகுதியில் கிருஷ்ணராயபுரம் சட்ட மன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி பனைவிதைகளை நடவு செய்து பணியை தொடங்கி வைத்தார். இது குறித்து மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முழுவதும் பனைவிதைகள் சேகரிக்கப்பட்டு 5 கட்டங்களாக பனைவிதைகள் நடும் பணி ஒகேனக்கல் முதல் பூம்புகார் வரை தருமபுரி, ஈரோடு, சேலம், நாமக்கல், கரூர், திருச்சி, தஞ்சாவூர், மயிலாடுதுறை உள்ளிட்ட 8 மாவட்டங்களில் காவிரிக்கரையின் இரு பக்கங்களிலும் 416 கிலோமீட்டர் தொலைவிற்கு நடைபெற்று வருகிறது. அந்த வகையில் கரூர் மாவட்டத்தில் சுமார் 10 லட்சம் பனைவிதைகள் நட திட்டமிடப்பட்டள்ளது. இன்றைய தினம் கரூர் மாவட்டம் மண்மங்கலம், புகலூர், குளித்லை மற்றும் கிருஷ்ணராயபுரம் ஆகிய வட்டத்திற்குட்பட்ட 22 இடங்களில் காவிரிக் கரையில் மொத்தம் 26,000 பனை விதைகள் முதல் கட்டமாக நடவு செய்யப் படுகிறது. இப்பணி தொடர்ந்து நடைபெற உள்ளது. இப்பணியில், 3500 க்கும் மேற்பட்ட மாணவர்கள், மகளிர் சுயஉதவி குழுவினர், சுற்றுச்சூழல் அமைப்புகள் தன்னார்வலர்கள், சமூக சேவகர்கள், தொண்டு நிறுவனங்கள் பங்கேற்று பனை விதைகளை நடவுள்ளனர். இவ்வாறு மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் தெரிவித்தார்.



# மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம்



மயிலாடுதுறை, செப். 22

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாவட்ட கலெக்டர் ஏ.பி.மகாபாரதி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது

ஆறுகள், குளங்கள், நீர் செல்லும் கால்வாய் கரைகளை சரிப்படுத்திடவும், கரைகளில் உடைப்பு ஏற்பட்டால் அதனை உடனடியாக அடைப்பதற்கு போதுமான மணல் மூட்டைகள் முன்கூட்டியே தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

மழைகாலங்களில் பொதுமக்கள் தங்கக்கூடிய நிவாரண மையங்களான பள்ளிகளின் கட்டிடங்கள் நல்ல நிலையில் உள்ளதா என்பதை ஆய்வு செய்தும், ஆபத்தான கட்டிடங்களை உடனடியாக அகற்றவும், கட்டிடங்களில் குடிநீர் மற்றும் கழிவறை வசதிகள் செய்து தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். சுகாதாரத்துறையினர் மழைகாலத்திற்கு தேவையான மருந்துகளை தமிழ்நாடு மருத்துவப்பணி கழகத்திலிருந்து பெற்று இருப்பு வைத்துக்கொள்ள வேண்டும்.

மீன்வளத்துறையினர் மழை,வெள்ள காலங்களில் படகுகள்,கட்டுமரம் மற்றும் படகு இயக்குபவர்கள்,நீச்சல் வீரர்கள் ஆகியோர்களை அவசர காலத்தில் பயன்படுத்திட ஏதுவாக தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். மீன்பிடிக்க செல்லும் மீனவர்களுக்கு உரிய முன்னெச்சரிக்கை தகவல்களை தெரிவித்திட வேண்டும். அனைத்து நியாய விலைக் கடைகளிலும் அரிசி,சர்க்கரை, கோதுமை, மண்ணெண்ணெய் போன்ற அத்தியவாசிய பொருட்கள் தேவையான அளவு வைத்திட வேண்டும். தீயணைப்பு படையினர் மீட்பு பணிக்கு தேவைப்படும் ரப்பர் படகுகள்,மிதவை படகுகள் ஆகியவற்றை போதுமான அளவில் தயார் நிலையில் வைத்திருக்கு வேண்டும். கால்நடை பராமரிப்புத்துறையினர் மழைக்காலங்களில் கால்நடைகளுக்கு ஏற்படும் தொற்று நோய்களுக்கு தடுப்புசி முகாம் நடத்திட வேண்டும். மேலும் தேவையான மருந்துகளை போதிய அளவில் இருப்பு வைத்திருக்க வேண்டும். வருவாய்த்துறையினர் தொடர்ந்து கண்காணித்திட வேண்டும். தாழ்வான பகுதிகளை முன்கூட்டியே கண்டறிந்த அதற்குரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். முதல்நிலை மீட்பாளர்களை கொண்டு பொதுமக்களுக்கு பேரிடர் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும்.

கடந்த காலங்களில் பெறப்பட்ட அனுபவங்களை மனதிற்கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட கலெக்டர் ஏ.பி.மகாபாரதி தெரிவித்தார்கள்.

# கோவையில் பிடிக்க முயன்ற குற்றவாளி கத்தியால் வெட்டியதால் துப்பாக்கியால் சுட்டு பிடித்த போலீஸ்

கோவை, செப். 22

கோவையில் குற்றச்சம்பவங்களை கட்டுபடுத்த காவல்துறை பல்வேறு சட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது, இதில் பழைய குற்றவாளிகள் நடவடிக்கைகளை கண்காணிப்பது, வழக்குகளுக்கு முறையாக ஆஜர் படுத்த அறிவுறுத்துவது என போலீசாருக்கு பணிகள் வழங்கபட்டு,குற்றவாளிகளின் செயல்களை கண்காணித்து வருகின்றனர், இந்த நிலையில், 2 ரேஸ் கோர்ஸ் காவல் நிலையத்தில், 81/23 / 147,148,506(2),302 வழக்கு சம்பந்தமாக நீதி மன்றத்தில் ஆஜராகமல் இருந்த நாகர்கோவிலை சேர்ந்த இசக்கி மகன் ஆல்வின் (வ40) கொடிசியா மைதானத்தில் இருப்பதாக கிடைத்த தகவல் படி அவரை பிடிக்க, உதவி ஆய்வாளர் கார்த்திகேயன் (1 ), தலைமையில் ஆன தனிப்படையினர்

தலைமை காவலர்கள் சந்திரசேகர், ராஜ்குமார், சசி ஆகியோர்,போலீசார் தேடிய ஆல்வினை அதிகாலை 2.30 மணிக்கு பிடிக்க முயற்சித்த போது குற்றவாளி தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் போலீசாரை தாக்கியதில் தலைமை காவலர் ராஜ்குமாருக்கு இடது மணிக்கட்டுப் பகுதியில் வெட்டுக்காயம் ஏற்பட்டது, மற்ற போலீசை தாக்க முயற்சித்து தப்பி ஓட முயன்ற குற்றவாளியை சப் இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன் தற்காப்பிற்காக தான் வைத்திருந்த கைதுப்பாக்கியால் குற்றவாளியின் இரண்டு கால் முட்டிகளிலும் துப்பாக்கியால் சுட்டதில் தப்பமுடியாமல் காயம் பட்டு கீழே விழுந்தார், தொடர்ந்து அவசர சிகிச்சைக்காக அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சை அளிக்கபட்டு வருகிறார்கள். தற்போது

நல்ல நிலையில் உள்ளார் என போலீசார் தெரிவித்தனர், இதனால் கோவையில் குற்றவாளியான அல்வினை போலீசார் துப்பாக்கியால் சுட்டு பிடித்த சம்பவம் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது




# உங்களுக்கு டோபமைன்னா என்ன தெரியுமா?

## Dopamaine @ 2.22 டிரைலர்




கடந்த மார்ச் மாதம் அறிமுக இயக்குனரான பாஸ்கல் வெப்பம் குளிர் மழை படத்தை இயக்கினார். ஹேஷ்டேக் FDFS நிறுவனம் இப்படத்தை தயாரித்துள்ளது.

இந்த படத்தில், திரவ் மற்றும் இஸ்மத் பானு ஆகியோர் நடிகர்களாக அறிமுகமாகி முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்து இருந்தனர். எம்.எஸ். பாஸ்கர் இப்படத்தில் முக்கியமான கதாப்பாத்திரத்தில் நடித்தார். திரைப்படம் வெளியாகி மக்களிடையேயவும் விமர்சகர்கள் மத்தியிலும் நல்ல வரவேற்பை பெற்றது.

இதைத் தொடர்ந்து திரவ் அடுத்தப் படத்தை இயக்கியுள்ளார். இப்படத்தை ஹேஷ்டேக் FDFS தயாரிப்பு நிறுவனம் தயாரித்துள்ளது. படத்திற்கு டோபமைன் @ 2.22 என தலைப்பிட்டுள்ளனர்.

இப்படம் 7 வெவ்வேறு சூழலில் இருந்த வந்த நபர்கள் அவர்களின் வாழ்க்கை ஒரு நடக்கப் போகிற கொலையில் ஒன்று சேர்வது போலவும் கதைக்களம் அமைக்கப்பட்டுள்ளது என படக்குழு கூறியுள்ளது.

படத்தில் திரவ், விஜய் டியூக், விபிதா, நிகிலா சங்கர், சத்யா, மற்றும் பலர் நடித்துள்ளனர். திரவ் இயக்கும் இப்படத்திற்கு அவரே படத்தொகுப்பையும் மேற்கொண்டுள்ளார். மொத்த படமும் சென்னையை சுற்றி 20 நாட்களில் படமாக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

படத்தின் டிரைலர் தற்பொழுது வெளியாகியுள்ளது. திரைப்படம் வரும் 20 ஆம் தேதி சிம்பிலி சவுத் ஓடிடி தளத்தில் வெளியாகவுள்ளது. படத்தில் 2.22 மணிக்கு ஒரு கொலை நடக்க போகிறது எனவும் இது டோபமைனின் எஃபக்டினால் இந்த கொலை நடக்கவிருக்கிறது என காட்சிகள் அமைந்துள்ளது. இந்த கொலை எதற்காக நடக்கவிருக்கிறது என சஸ்பென்ஸ் மிகுந்த டிரைலரை படக்குழு வெளியிட்டுள்ளது.

# நடன இயக்குனர் ஜானி கோவாவில் கைது



தமிழ், தெலுங்கு திரை உலகில் பிரபல நடன இயக்குநராக திகழ்பவர் ஜானி.

கடந்த சில தினங்களுக்கு முன்பு இவர் மீது பெண் நடன கலைஞரான 21 வயது இளம்பெண் ஒருவர் பாலியல் பலாத்கார புகார் கொடுத்தார். சென்னை, ஐதராபாத் ஆகிய இடங்களில் நடந்த படப்பிடிப்புகளில் தன்னை ஜானி பாலியல் பலாத்காரம் செய்ததாக குற்றம் சாட்டி புகார் அளித்தார்.

இதையடுத்து ஐதராபாத் அருகில் உள்ள நர்சிங்கி போலீசார் விசாரணை நடத்தி ஜானி மீது 3 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்தனர். இதை தொடர்ந்து அவர் தலைமறைவாகி விட்டதாக தகவல்கள் வெளியானது.

தொடர்ந்து தெலுங்கு திரை உலகில் நடன இயக்குநராக ஜானி பணிபுரிவதற்கு பிலிம் சேம்பர் தடை விதித்தது. மேலும் பவன் கல்யாண் கட்சியில் இருந்தும் நீக்கம் செய்யப்பட்டார்.

தனக்கு 16 வயதாக இருக்கும்போது ஜானி தன்னை பாலியல் பலாத்காரம் செய்ததாக இளம்பெண் குற்றம் சாட்டினார். மேலும் அதற்கான 40 பக்க ஆவணங்களை தெலுங்கானா மகளிர் ஆணையத்தில் இளம்பெண் சமர்பித்தார்.

இதையடுத்து பாதிக்கப்பட்ட இளம்பெண்ணுக்கு போலீஸ் பாதுகாப்பு வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இது பற்றி மகளிர் ஆணையத்தின் தலைவியான நெரெல்லி சாரதா கூறுகையில், திரைப்பட துறையில் இது போன்ற வழக்குகளை விசாரிக்க உயர்மட்ட கண்காணிப்பு குழுவும் அமைக்கப்படும். இந்த வழக்கை மிகவும் தீவிரமாக நாங்கள் எடுத்துக் கொள்வோம் என்று கூறினார்.

இந்நிலையில் ஜானி மீது குழந்தைகள் பாதுகாப்பு சட்டமான போக்சோ சட்ட பிரிவுகளின் கீழ் நர்சிங்கி போலீசார் நேற்று வழக்குப்பதிவு செய்தனர்.

இதை தொடர்ந்து தலைமறைவான ஜானியை போலீசார் தீவிரமாக தேடி வந்தனர். இந்த நிலையில் கோவாவில் தலைமறைவாக இருந்த அவரை தெலுங்கானா போலீசார் தற்போது கைது செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

காவாலா, ரஞ்சிதமே, அரபிக்குத்து உள்பட பல தமிழ் பாடல்களுக்கு நடனம் அமைத்தவரும் சமீபத்தில் தேசிய விருது அறிவிக்கப்பட்டவருமான ஜானி மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து, கைது செய்யப்பட்டிருப்பது திரை உலகில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# அவர் விளையாடுவதை பார்க்க பணம் கொடுத்து கூட டிக்கெட் வாங்குவேன் ஆஸி.முன்னாள் வீரர் பாராட்டு



இந்தியா வங்காளதேசம் இடையிலான டெஸ்ட் போட்டி சென்னையில் நடைபெற்று வருகிறது. இந்த ஆட்டம் கடந்த 19ம் தேதி தொடங்கியது. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த இந்தியா தனது முதல் இன்னிங்சில் 376 ரன்கள் குவித்தது.

இந்தியா தரப்பில் அஸ்வின் 113 ரன்கள் எடுத்தார். தொடர்ந்து தனது முதல் இன்னிங்சை தொடங்கிய வங்காளதேசம் 149 ரன்னில் ஆல் அவுட் ஆனது. இந்தியா தரப்பில் பும்ரா 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதையடுத்து 227 ரன்கள் முன்னிலையுடன் தனது 2வது இன்னிங்சை தொடங்கிய இந்தியா நேற்றைய 2ம் நாள் ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 81 ரன்கள் எடுத்திருந்தது. இதன் மூலம் நேற்றைய ஆட்ட நேர முடிவில் இந்தியா 308 ரன்கள் முன்னிலை பெற்றிருந்தது. இந்நிலையில் 3வது நாள் ஆட்டம் இன்று நடைபெற்று வருகிறது.

இதில் இந்தியா தரப்பில் தொடர்ந்து பேட்டிங் செய்த ரிஷப் பண்ட் மற்றும் சுப்மன் கில் இருவரும் அதிரடியாக ஆடி ரன்கள் குவித்தனர். இருவரும் வங்காளதேசத்தின் பந்துவீச்சை அடித்து நொறுக்கினர். இருவரும் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் அணியின் ஸ்கோர் மளமளவென உயர்ந்தது.

அதிரடியாக ஆடிய இருவரும் சதம் அடித்து அசத்தினர். இதில் விக்கெட் கீப்பர் ரிஷப் பண்ட் 109 ரன் (13 போர், 4 சிக்ஸ்) அடித்து அவுட் ஆனார். இதனையடுத்து இந்தியா 2வது இன்னிங்சில் 4 விக்கெட்டுகளை இழந்து 287 ரன்கள் அடித்த நிலையில் டிக்ளேர் செய்தது. இட்தனையடுத்து 515 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி வங்காளதேசம் பேட்டிங் செய்து வருகிறது.

இந்நிலையில் ரிஷப் பண்ட் ஒரு சிறந்த பவர் ஹிட்டராக இருப்பதாக ஆஸ்திரேலிய முன்னாள் வீரர் ஆடம் கில்கிறிஸ்ட் பாராட்டியுள்ளார்.

இது குறித்து பேசிய அவர் கூறுகையில், "ரிஷப் பண்ட் என்னைவிட கொஞ்சம் அதிரடியான ஆட்டத்தை விளையாடுகிறார் என்று நினைக்கிறேன். அவருடைய ஆட்டம் என்னை வெகுவாக கவர்ந்துள்ளது. நான் ஆக்ரோஷமாக பேட்டிங் செய்து பழக்கப்பட்டவன். ஆனால் ரிஷப் பண்ட் அச்சமே இல்லாமல் மிக அதிரடியாக விளையாடுகிறார். அவரிடம் எனக்கு பிடித்த விஷயம் என்னவென்றால் அழுத்தமான வேளையில் கூட அதிரடியாக விளையாடி அதை எடுத்து விடுகிறார். உண்மையிலேயே பண்ட் விளையாடுவதை ரசிகர்கள் விரும்பி பார்க்கின்றனர்.

என்னை பொறுத்தவரை நானும் ரிஷப் பண்ட் விளையாடும் விதத்தை பார்க்க பணம் கொடுத்து கூட டிக்கெட் வாங்குவேன். அந்த அளவிற்கு அவருடைய ஆட்டம் என்னை கவர்ந்துள்ளது. இவ்வளவு பெரிய ஆபத்தில் சிக்கி பிழைத்து வந்துள்ளார். மிகவும் வேடிக்கையான ஒரு நல்ல வீரர். அவருக்கு எவ்வாறு கிரிக்கெட் போட்டிகளில் முன்னேறி சிறந்த முடிவுகளை பெற முடியும் என்பது தெரியும்" என்று கூறினார்.

# நடுவரால் தப்பித்தேன்.. இல்லையெனில் அந்த ஓவரில் 7 சிக்சர்கள் பறந்திருக்கும் நினைவுகளை பகிர்ந்த பிராட்

கடந்த 2007ம் ஆண்டு நடைபெற்ற டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரின்போது இங்கிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரான யுவராஜ் சிங் இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்டூவர்டு பிராட் வீசிய ஒரு ஓவரில் தொடர்ந்து 6 பந்துகளையும் சிக்சர்களாக விளாசி அசத்தியிருந்தார்.

அவரது அந்த அதிரடியான சிக்சர்கள் இன்றளவும் பெருமளவில் ரசிகர்கள் மறக்காமல் இருந்து வருகின்றனர்.

இந்த சாதனை நிகழ்த்தப்பட்டு 17 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள வேளையில் அந்த சம்பவம் குறித்து ஏற்கனவே யுவராஜ் சிங் தனது நினைவுகளை பகிர்ந்திருந்தார். இந்நிலையில் தற்போது 17 ஆண்டுகள் கழித்து அன்று நடைபெற்ற சம்பவம் குறித்து இங்கிலாந்து அணியின் வீரர் ஸ்டூவர்ட் பிராட்டும் தனது நினைவுகளை பகிர்ந்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், "17 ஆண்டுகளாக நான் அந்த போட்டியை மீண்டும் எந்த ஒரு வீடியோவிலும் பார்த்தது கிடையாது. இதை நான் ஒப்புக்கொள்ள வேண்டும். ஏனெனில் அந்த அளவிற்கு யுவராஜ் சிங் அந்த ஒரு ஓவரில் எனது பந்துவீச்சை சிதைத்து விட்டார். அதிலும் குறிப்பாக அந்த ஓவரில் ஒரு பந்தை நான் நோபாலாக வீசியிருந்தேன். ஆனால் நடுவர் அப்போது அந்த பந்திற்கு நோபால் கொடுக்காதது எனக்கு கிடைத்த அதிர்ஷ்டம். இல்லையென்றால் அந்தப் பந்தும் சிக்சராக மாறி ஏழு சிக்சர்களை யுவராஜ் சிங் விளாசியிருப்பார். நல்ல வேலையாக நான் அதிலிருந்து தப்பித்து விட்டேன்" என்று கூறினார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.